REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

ரஷ்யா நடத்தும் அணுகுண்டு சோதனை

திங்கள்தோறும் வெடிப்பதாகத் தகவல்

1955-ம் ஆண்டிற்கான சோதனைத் திட்டத்தின்படி, ரஷ்யா அண்மையில் மேலும் ஒரு அணுகுண்டு வெடிகுச் சோதனை நடத்தியதாக பிரிட்டிஷ் பாதுகாப்பு இலாகா மந்திரி சபை தெரிவித்திருக்கிறது.

கடந்த ஆகஸ்டு திங்களில், ரஷ்யா மீண்டும் அணுகுண்டு பரிசோதனை நடத்தத் துவங்கிவிட்டது என்றும், நடைபெற்றுள்ள சோதனை குறித்து ஆராயும்போது தொடர்ந்து ரஷ்யா இந்தச்

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] · சென்னை: ஐப்பசி 26உ சனி (12—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 27உ ஞாயிறு (13—11—55) [இதழ் 129

இந்தி ஆதிக்கம் 'பேய் உரு'க் கொள்கிறது!

இரயில் நிலையம் முழுவதும் இந்தி மயமாகும்

ஊர்ப் பெயர்கள் மட்டுமின்றி இதர சொற்களும் இந்தியிலேயே எழுதப்படுமாம்!

★

புதுடில்லி, நவ. 11—

இந்தி ஆதிக்கம் 'பேயுரு'க் கொண்டு வருகிறது என்பதற்கு தொடர்ந்து சான்றுகள் கிடைத்து வருகின்றன.

இரயில் நிலையங்களில் இப்போது ஊர்ப் பெயர்கள் மட்டும் இந்தியில் எழுதப்பட்டிருக்கின்றன. இனி, இரயில் நிலையத்திற்குள், முழுவதும் இந்தியே இடம் பெறுவதற்கான ஏற்பாடுகளை இந்தியப் பேரரசு தீவிரமாகச் செய்து வருகிறது என்று தெரியவருகிறது.

இரயில் நிலையத்தில் உபயோகப்படும் வார்த்தைகள் பலவற்றிற்கும் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி மொழிச் சொற்களடங்கிய பட்டியல் ஒன்று தயார் செய்து, அதனையே இனி இந்தியா முழுவதுமுள்ள இரயில் நிலையங்களில் பயன்படுத்த வேண்டும் என்று இரயில்வே 'போர்டு' உத்தரவிட்டிருக்கிறதாம்.

'பிளாட்பாரம்', 'ஸ்டேஷன் மாஸ்டர்' என்ற சொற்கள் அப்படியே இந்தியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றனவாம்; 'உதவி ஸ்டேஷன் மாஸ்டர்' என்பது, இனி, 'சஹாயக் ஸ்டேஷன்—மாஸ்டர்' என்றும், டிக்கட் கொடுக்குமிடம் 'டிக்கட்கர்' என்றும், 'பார்சல்' அனுப்புவது, 'ஜானே வாலா பார்சல்' என்றும், 'பார்சல்' எடுப்பது, 'ஆனேவாலா பார்சல்' என்றும் அழைக்கப்படுமா .

இதுபோன்ற இன்னும் ஏராளமான இந்திச் சொற்கள் அடங்கிய பட்டியல், எல்லா இரயில் நிலையங்களுக்கும் அனுப்பப்படுகிறது என்பதுடன், அந்தச் சொற்களைத்தான் இனி இரயில் நிலையங்களில் உபயோகிப்பார்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்தியில் எழுதப்படும் போர்டுகளை, இந்தி அதிகாரிகள் சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், பட்டியலில் குறிப்பிட்டில்லாத வேறு எந்தச் சொல்லையும் உபயோகிக்கக்கூடாது என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறதாம்.

இரயில்வே போர்டில் முழுநேரம் பணியாற்றும் இந்தி மொழி அதிகாரி, முக்கியமான எல்லா இரயில் நிலையங்களுக்கும் சென்று, இது குறித்து ஆலோசனை வழங்குவார் என்றும் கூறப்படுகிறது.

மலிந்துவரும் தற்கொலைகள்

தடுப்பதற்கு நடவடிக்கை

சௌராஷ்டிர சர்க்கார் விசாரணைக் குழு நியமிக்கிறது

ராஜ்கோட், நவ. 11—

மாநிலத்தில் நிகழும் தற்கொலைகளுக்கான காரணங்களைக் கண்டறிவதற்காக, மல்தேவ் அதோத்ரா என்பவர் தலைமையில் விசாரணைக் குழுவை சௌராஷ்டிர சர்க்கார் நியமித்திருப்பதாகத் தெரியவருகிறது. எழுபேரடங்கிய அந்தக் குழுவினர், மூன்று மாத காலம் விசாரணை நடத்தி, சர்க்கார் இதனைத் தடுப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளை சிபாரிசு செய்வர் என்று தெரியவருகிறது.

சௌராஷ்டிரத்தில் பெண்களே அதிகமாகத் தற்கொலை செய்து கொள்வதாயும், ஆறு மாதத்தில் 282 தற்கொலைச் சம்பவங்கள் நடைபெற்றதாயும் செப்டம்பர் திங்களில் நடைபெற்ற சட்ட சபைக் கூட்டத்தில் முதன் மந்திரி ரஷிக்லால் பரீக் தெரிவித்திருந்தார்.

வடநாட்டவர் சாதிவெறி

தாழ்த்தப்பட்டவர்கள் சாதி இந்துக்களை நேருக்கு நேர் நோக்கலாகாதாம்!

பரோடா, நவ. 10—

சாதீய வெறி, எவ்வளவு உச்சம் பெற்ற நிலையில் இன்னும் நீடித்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு நல்லதோர் உதாரணம் கிடைத்திருக்கிறது.

சம்பாளா எனும் கிராமப் பஞ்சாயத்து சபையில் தாழ்த்தப்பட்ட உறுப்பினர்கள் இதர சாதி இந்துக்களெனப்படுவோருடன் நேருக்கு நேராக உட்காரக்கூடாதாம். சாதி இந்துக்களுக்குத் தங்கள் முதுகைக் காட்டித்தான் உட்கார வேண்டுமாம்.

நேருக்குநேர் தாழ்த்தப்பட்டவர்கள் நோக்குவது தங்களைப் புண்படுத்துவது என்று கருதுகின்றனராம். இது அந்தக் கிராமத்தில் பன்னெடுங்காலமாக இருந்துவரும் பழக்கமாம்.

சாதி இந்துக்களெனப்படுவோர் தாழ்த்தப்பட்ட மக்களைத் துன்புறுத்துவதாகக் கண்டித்து பத்ரா வட்டம் ம.சோ.கட்சித்தலைவர் சுல்தான்பாய் மலேஜ் என்பார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று இத்தகவலைத் தருகிறது.

சம்பாளா கிராமப் பஞ்சாயத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினரான சித்தலாலா என்பார், ஒரு முறை போலிசாரின் பாதுகாப்புப் பெற வேண்டிவந்தது என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

திட்டக் குழுவுடன் மத்திய மந்திரி 'கடும் போராட்ட'மாம்!

செய்திப் போக்குவரத்துத் திட்டம் வெட்டப்படுவதற்கு எதிர்ப்பு

வர்த்தக, விமானப் போக்குவரத்து, டெலிபோன், தந்தி, தபால் இந்த வசதிகளை விரிவாக்குவதற்காக, சுமார் ரூ 142 கோடி மதிப்பில் தயாரித்துள்ள திட்டத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக, திட்டக்குழுவுடன் மத்திய சர்க்கார் செய்திப் போக்குவரத்து இலாகா 'கடும் போரி'ல் ஈடுபட்டிருப்பதாக பெருமைபடக் கூறப்படுகிறது.

திட்டக் குழுவினர், இலாகாவின் திட்டத்தை சுமார் ரூ. 125 கோடி பெறுமானமுள்ளதாகத் திருத்தி அமைத்து தணிக்கைக்கு அனுப்புமாறு தெரிவித்திருக்கின்றனராம்.

ஆனால், தபால் தந்தி இலாகாவினரோ, தங்கள் திட்டத்தை மேலும் சுருக்குவது சாத்தியமல்லவென்றும் கூறியிருக்கின்றனராம்.

தொழில், விவசாயத்துறை வளரும்போது, அதற்கேற்ப செய்திப் போக்குவரத்து வசதியும் வளரவேண்டும் என்றும் மந்திரி சபையினர் கருதுகின்றனராம்.

தனது இலாகா திட்டம் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக ஜெ. ஜீவன்ராம் தீவிரமாகப் பாடுபட்டு வருகிறாராம்!

பாக். பிரதேசம் மீது ஆப்கன் விமானம்?

கராச்சி, நவ. 11—

பாகிஸ்தான் பிரதேசத்தில், கடந்த மூன்று நாட்களாக ஆப்கன் விமானமொன்று அத்துமீறிப் பறந்ததாகப் பாக். வட்டாரங்கள் புகார் கூறுகின்றனவாம்.

ஆப்கனிஸ்தானிலுள்ள ஜலலாபாத் திசையிலிருந்து அந்த விமானம் வந்தது என்பதைத் தவிர, வேறு விபரங்கள் எதையும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கவில்லையாம்.

இதுபற்றி, 'கடும் கண்டனம்' ஒன்று ஆப்கனுக்குத் தாக்கல் செய்வதற்கு பாகிஸ்தான் முடிவு செய்திருக்கிறதாம்

கோரிக்கையை ஏற்க சர்க்கார் மறுப்பு!

சென்னை, நவ 11—

தீபாவளியை முன்னிட்டு ஒரு மாத சம்பளம் 'போனசாக'வோ அல்லது, இடைக்கால நிவாரணமாகவோ தருமாறு சென்னை சர்க்கார் கெஜட் பதிவில்லாத ஊழியர் சங்கத்தவர் சர்க்காரைக் கேட்டிருந்தனர் என்றும், சர்க்கார் இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டதாயும் தெரியவருகிறது.

தமிழ் நாட்டில் மூன்று சர்க்கரை ஆலைகளாம்!

ஆம்பூர், நவ. 11—

கோவை, செங்கல்பட்டு, தஞ்சாவூர் மாவட்டங்களில் கூட்டுறவு முறையில் மூன்று சர்க்கரை ஆலைகளைத் துவங்குவதற்கான திட்டம் குறித்து சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலைச் சங்கத்தைத் துவக்கிவைத்த கூட்டுறவு இலாகா மந்திரி ஏ. பி. ஷெட்டி இந்த தகவலைத் தந்திருக்கிறார்.

ஓராண்டில் 41,000 முறை ரயில்கள் நிறுத்தப்பட்டன!

தினந்தோறும் 112 முறை சங்கிலிகள் இழுக்கப்பட்டிருக்கின்றன!

புதுடில்லி, நவ. 10—

கிழக்குப் பகுதி இரயில்வேயின் ஒரு பிரிவில், ஒரு திங்களில் 10 நாட்களுக்குள்ளாக 228 முறை பிரயாணிகள் வண்டி அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது என்று கூறப்படுகிறது.

இரயில்கள் இப்படி நிறுத்தப்படுவதால், குறித்த காலத்தில் வண்டிகள் போகவர முடிவதில்லை என்றும், சாமான் போக்குவரத்தும்—முக்கியமாக உணவுப் பண்டங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிடுவதாயும் கூறப்படுகிறது.

கடந்த 1954—55-ம் ஆண்டில் இந்தியாவில் தினந்தோறும் 112 முறை வண்டிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன மொத்தமாக 41.000 சந்தர்ப்பங்களில் இரயில்கள் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தப்பட்டன என்று கூறப்படுகிறது.

18,800 தொழிலாளர் வேலை நிறுத்தம்

ஐதராபாத், நவ. 10—

நிசாம் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் 3,800 பேர் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவாக இந்த ஆலையைச் சேர்ந்த பண்ணைத் தொழிலாளர்கள் 15,000 பேரும் இன்று காலை முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்

(4-ம் பக்கம் பார்க்க.)

பல்கலைக் கழக மாணவர் தலைவர் பட்டினிப் போர்!

பட்டமளிப்பு விழாச் சம்பவ எதிரொலி

அலகாபாத் பல்கலைக் கழகம் மூடப்படுமா?

அலகாபாத், நவ. 10—

அலகாபாத் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மாணவர் தலைவரான லக்கன் சிங் என்பார் இன்று பல்கலைக் கழக 'செனட்' வாயில் முன்பாக, பட்டினிப் போர் துவக்கியுள்ளார். தான் தண்ணீர்கூட அருந்தப்போவதில்லை என அவர் மாணவர்களிடம் தெரிவித்திருக்கிறாராம்.

பட்டமளிப்பு விழாவின்போது நடைபெற்ற சம்பவம் குறித்து புதிதாக விசாரணை நடத்த வேண்டும். என்று மாணவர்கள் கோரியதை ஏற்றுக்கொள்ள அதிகாரிகள் மறுத்துவிட்டதின் விளைவாகவே தான் இந்த பட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 12—11—'55 சனி

இஸ்ரேல்-எகிப்து மோதுதல்

இஸ்ரேலும் — எகிப்தும் மீண்டும் கடந்த கிழமையன்று மோதிக்கொண்ட சம்பவங்கள் ஊன்றிக் கவனித்தற்குரியன வாகும்.

கடந்த செப்டம்பர் திங்களில்தான் இரு நாடுகளும், எல்லையோரத்தில் தங்கள் தங்கள் இராணுவத்தினரை துப்பாக்கி முனையில் சந்திக்கச் செய்து, உலகத்தையே உலுக்கின. அந்தத் 'தாக்குதல்'கள் ஓய்ந்துவிட்டதாக உலகுக்கு அறிவிக்கப்பட்ட இரண்டொரு திங்களுக்குள்ளாகவே அந்த இரு நாடுகளும் மோதிக்கொள்ள முற்பட்டிருப்பது, 'சமாதான விரும்பி'களுக்கு பெரும் அச்சமூட்டியிருக்கிறது.

கடந்த செப்டம்பர் திங்களில் தாக்குதல் தோன்றிய போது, இரு நாடுகளின் எல்லையோரத்தில் 'பாரா' புரிந்துவரும் ஐ. நா. போர் நிறுத்த மேற்பார்வைக் குழுத் தலைவர், 'இராணுவ சூனிய'ப் பிரதேசத்தில் புகுந்துள்ள இஸ்ரேல் துருப்புகள் உடனே திரும்பப் பெற வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருந்தார். ஆனால், 'எகிப்தியர் தங்கள் துருப்புகளைத் திரும்பப் பெற்றாலன்றி தனது துருப்புகளைத் திரும்பப் பெற முடியாது' என்று இஸ்ரேல் கூறியது.

போர் நிறுத்த ஒப்பந்த எல்லைக் கோட்டிலிருந்து ஆயிரம் கெஜத்திற்கு அப்பால் இரு நாடுகளும் தங்கள் தங்கள் எல்லைக்குள் துருப்புகளை வைத்துக் கொள்ளலாம் என்பது முன்னைய ஏற்பாடு.

சில நாட்களுக்கு முன்பு மோதுதல் ஏற்பட்டபோது, எவர் முதலில் தாக்குதலைத் துவக்கினர் என்பதைத் தெரிந்துகொள்வது ஐ. நா. மேற்பார்வைக் குழுவினருக்கு முடியாது போய்விட்டதாயும், இஸ்ரேலியர், அந்தக் குழுவினர் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கவில்லை என்றும், அவ்வாறு ஐ. நா. மேற்பார்வைக் குழுவினர் சுதந்திரமாக நடமாடுவது பாதுகாப்புடையதல்லவென்று இஸ்ரேலியர் சமாதானம் கூறியதாயும், தங்களைச் 'சிறைப்படுத்தி'யதற்கு ஐ. நா. குழுவினர் எதிர்ப்பு தெரிவித்திருப்பதாயும் கூறப்படுகிறது.

யூத நாடான இஸ்ரேலும், எகிப்தும், எல்லையோரத்தில் இம்மாதிரி அடிக்கடி மோதிக்கொள்வது — ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்வது, ஏற்கனவேயுள்ள 'அபாயக் கட்டங்களை' அதிகரிப்பதாகத்தான் இருக்க முடியும்.

நாங்கள் தனித்து வாழ்வது எகிப்துக்கும், இதர அரபு நாடுகளுக்கும் பிடிக்கவில்லை; எங்களை அழித்துவிட, எங்களது சுதந்திரத்தை மீண்டும் பறித்துவிட எண்ணுகின்றனர்—என்று, எகிப்து மீதும், இதர அரபு நாடுகள் மீதும் இஸ்ரேல் குற்றஞ்சாட்டுகின்றது.

மாறாக—புதிதாக முளைத்த இஸ்ரேல், மண்ணாசையால் எங்கள் எல்லைகளை அபகரித்துக்கொள்ள முயற்சிக்கிறது—என்று எகிப்தும், இதர அரபு நாடுகளும் இஸ்ரேல்மீது குற்றம் சாட்டுகின்றன.

இந்தக் குற்றச்சாட்டுகளில், 'சமாதானப் பிரியர்கள்' என்று தங்களைத் தம்பட்டமடித்துக்கொள்ளும் பெரும் வல்லரசுகளின் தூண்டுதல் தொனிக்காமல் இல்லை என்பது தெளிவாகத் தெரியத்தான் செய்கிறது.

இஸ்ரேல் - எகிப்திய நாடுகளின் எல்லைகள்—இஸ்ரேல் பெரும் போராட்டத்திற்குப் பிறகு தோன்றி கணிசமான ஆண்டுகள் உருண்டோடிவிட்ட பின்னரும்—ஐ. நா. மேற்பார்வையாளர்களின் பாதுகாப்பில் இருந்துவரும் நிலையே, இரு நாடுகளும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் நியாயமான உள்ளங் கொண்டவர்களாக இல்லை என்பதைத் தெரிவிக்கின்றது.

இந்த இரு நாடுகளின் எல்லைகள் இறுதியாக வரையறுக்கப்படும்வரையில், இரு நாடுகளும் அடிக்கடி மோதிக்கொள்வதும், வல்லரசுகளிடம் ஆயுத பலம் பெற்றுக்கொண்டு தாக்குதல்களை நடத்துவதின்மூலம் அமைதிக்கு உலை வைக்க முற்படுவதும் தவிர்க்க முடியாதனவாகவே இருக்கும்—என்று கூறப்படும் கருத்து, நியாயமானதேயாகும்.

இரு நாடுகளும் தங்கள் எல்லைகளை நிர்ணயித்துக்கொள்வதில் ஒன்றுபடுவது இயலாதது என்று கூறப்படுவதை, உண்மை நிலைகளை உணர்வோர் ஏற்றுக்கொள்ள மறுப்பர் என்பது திண்ணம்.

இஸ்ரேலுடைய சுதந்திரத்தை அங்கீகரிப்பதே தங்களின் நிலையில் மாற்றத்தை உண்டுபண்ணும் என்று எகிப்தும், இதர அரபு நாடுகளும் 'வரட்டு கௌரவத்'தால் எண்ணுகின்றன— என்று, 'நடுநிலையாளர்' சிலர் தெரிவிப்பது, கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இஸ்ரேலுக்கு மேற்கத்திய வல்லரசுகளின் பின்னணியும், எகிப்துக்கு ரஷ்யாவின் பின்னணியும் இருப்பது உலகறிந்த இரகசியமாகையால்; அந்தக் கொடிய நிலையும் இஸ்ரேல் — எகிப்து தகராறுகள் முடிவடையாமலிருப்பதற்கு ஒரு காரணம் என்றே, 'நடுநிலையாளர்'கள் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும், இஸ்ரேல்—எகிப்து தகராறு நீடிப்பது, குறிப்பாக மத்தியக் கிழக்கையும், பொதுவாக உலகத்தையும் நீடித்த அச்சத்திற்குள்ளாக்குவதாகும் என்பது திண்ணம்.

இந்தத் தகராறினைத் தீர்க்க, சமாதானத்தை நிலைநிறுத்தும் பொறுப்புள்ள 'பெருந் தலை'கள் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

இராணுவம் சம்மந்தமான தகவல்களை அமெரிக்காவும்—ரஷ்யாவும் பரிவர்த்தனை செய்துகொள்ள வேண்டுமென்று அமெரிக்கத் தலைவர் ஐசன்ஹோவர் கூறிய யோசனையை மாலடோவ் நிராகரித்தார்.

தென் பகுதி இரயில்வே மென் யூனியன்

பொதுச் செயலாளர்

வ. வீராசாமி விலகல்

தென் பகுதி இரயில்வே மென் யூனியன் பொதுச்செயலாளரான தோழர் வ. வீராசாமி எம்.பி., அவர்கள், தான் சங்கப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும், 'தொழில் முரசு' ஆசிரியர் பொறுப்பிலிருந்தும் விலகிக்கோள்வதாக—அதற்கான காரணங்களை விளக்கி, சங்கத் தலைவர் எஸ். இராகவானந்தம் அவர்கட்கு எழுதியுள்ள கடிதத்தின் நகல் கீழே தரப்படுகிறது :—

அன்புள்ள தோழருக்கு,

கீழ்க்கண்ட காரணங்களுக்காக நான் எஸ். ஆர். எம். யூ.- பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும், 'தொழில் முரசு' ஆசிரியர் பதவியிலிருந்தும் விலகிக்கொள்ளுகிறேன். என் விலகலை ஒத்துக்கொள்ளும்படி பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

நான் விலகிக் கொள்வதின் காரணங்களாவன :—

1. தென்னாட்டில் ஒரு சுதந்திர ஜனநாயகத் தொழிற் சங்கம் அமையவேண்டும் என்ற கருத்துடன் சிறந்த கொள்கைகளைக் கொண்டு துவக்கப்பட்ட 'தென்பகுதி ரயில்வே மென்ஸ் யூனியன்', அது எந்தக் கருத்துடன் துவக்கப்பட்டதோ அந்த வகையில் துவக்கத்திலிருந்தே இயங்கவில்லை.
2. மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்களில் சிலர் தங்கள் விருப்பம்போல் காரியங்களை செய்து இந்த 'யூனியன்' வளராமல் செய்ய எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்கிறார்கள்.
3. 'யூனியனு'டைய கொள்கைகளைச் சரியாக புரிந்துகொள்ளாததினாலோ, அல்லது, தவறாகப் புரிந்துகொண்டதினாலோ 'யூனியன்' உறுப்பினர்களுக்குள் வேற்றுமை அதிகரித்துள்ளது. பொன்மலை—திருச்சி கிளைகள், மத்திய நிர்வாகக் குழு உறுப்பினர்களில் சிலர் ஆகியவர்களுடைய சுயநலத்தாலும், 'கர்வ'த்தாலும் 'யூனியன்' உறுப்பினர்களுக்குள் அதிருப்தி, ஒற்றுமையின்மை, கருத்து வேற்றுமை உண்டாகிவிட்டது.
4. இவர்களுடைய நடத்தை, உறுப்பினர்களுடைய நிதான மனோநிலையைக் குலைத்துவிட்டதுடன், 'யூனியன்' வளர்ச்சிக்கும் அதிகப்படி உறுப்பினர்கள் சேர்ப்பதற்கும் பாதகம் உண்டு பண்ணிவிட்டது.
5. கூட்டுப் பொதுச் செயலாளர் (ஏ. கே. சச்சிதானந்தம்) என்னைக் கேட்காமல் கிளைகளுக்கு சுற்றறிக்கை அனுப்புவதும், கடிதங்கள் எழுதுவதுமான செயலில் ஈடுபட்டு, 'சர்வாதிகார' முறையில் காரியங்கள் செய்கிறார். அப்படி அவர் செய்யக்கூடாதென்று அவரை நான் எழுத்து மூலம் வேண்டிக்கொண்டும் அவர் 'யூனியன்' சட்டத்திற்கு விரோதமான- 'யூனியனு'க்குக் கேடு பயக்கும் நடவடிக்கைகளைச் செய்து வருகிறார்.
6. 'தொழில் முரசு' இதழை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் தோழர்களுக்கு, 'முன்னறிவிப்பு' கொடுக்காமலும், நியாயமான காரணம் இல்லாமலும் அது வெளியிடாமல் நிறுத்தப்பட்டுவிட்டது.

அன்பார்ந்த தலைவர் அவர்களே,

நான், எந்த யூனியனில் ஆரம்பத்திலிருந்து உழைத்து வருகிறேனோ அதில் இம்மாதிரி போக்கையும், கட்டுப்பாடு இன்மை, கர்வம், சுயநலம் ஆகியவைகளை யூனியனில் உள்ள யார் செய்தாலும் அதை நான் பொறுக்க முடியாதென்பதை தெரிவித்துக்கொள்வதுடன், நீங்களும் இதை ஏற்றுக்கொள்வீர்களென நம்புகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக நான் மேலே குறிப்பிட்ட குறைகளை அகற்ற எவ்வளவோ முயற்சி செய்தும், சில உறுப்பினர்களுடைய நடத்தையால் என் மனதிற்குத் திருப்தி ஏற்படும் அளவிற்கு நான் வெற்றியடைய முடியாமற்போய்விட்டபடியால், பொதுச் செயலாளர் பதவியினின்றும், 'தொழில் முரசு' ஆசிரியர் பதவியிலிருந்தும் நான் விலகிக்கொள்ளுகிறேன்.

இரயில்வேத் தொழிலாளர்களுடையவும் 'யூனியனு'டையவும் நன்மையையே பெரிதாகக் கருதி உழைக்கும் உங்களுக்கும், உங்களுடன் ஒத்துழைக்கும் உறுப்பினர்களுக்கும் என் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்னிடம் காட்டிய அளவு கடந்த அன்பிற்கும் என் நன்றி. மத்திய நிர்வாகக் குழுவிற்கும், கிளைகளுக்கும் என் நன்றியைத் தெரிவியுங்கள்.

என்னிடம் படிப்பகம் அமைப்பதற்காகக் கொடுக்கப்பட்ட ரூ. 75 உள்ளது. அதை விரைவில் உங்களுக்கு அனுப்புகிறேன்.

உங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) வ. வீராசாமி
17—10—55

திரு-கொச்சி சித்தூர் தாலுகா தமிழக இணைப்பு மாநாடு

இம்மாநாடு, 9—11—55-ல், கொழிஞ்சாம்பாறை பச்சையப்பா நகரில் சிறப்புடன் நடைபெற்றது. பெருவாரியான தமிழர்களும், சேரளர்களும், குறிப்பாக மாணவத் தோழர்களும் கலந்துகொண்டனர்.

காலை 8 மணிக்கு திரு. என். மகாலிங்கம் எம். எல். ஏ., அவர்கள் கொடியேற்று விழாவினை நடத்திவைத்தார்.

காலை 9 மணிக்கு பச்சையப்பா நகரிலிருந்து சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய பகுதிகளில் சுற்றி கிருஷ்ணா தியேட்டர் வந்துசேர்ந்தது.

10-30 மணிக்கு மாநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டம் துவங்கி பிற்பகல் 3 மணி வரை நடைபெற்றது.

ஊர்வலம்

பிற்பகல் 3½ மணிக்கு கிருஷ்ணா தியேட்டர் திடலிலிருந்து, மாநாட்டுத் தலைவர், திறப்பாளர், சொற்பொழிவாளர்களை மாநாட்டு வரவேற்புக் குழுவினர், மேள வாத்தியங்களுடன ஊர்வலமாக மாநாட்டுக் கொட்டகைக்கு அழைத்துச் சென்றனர். அன்று பிற்பகல், சித்தூர் கல்லூரி; உயர்நிலைப்பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டது.

ஊர்வலத்தில் மாணவர்களும், விவசாயத் தொழிலாளர்களும் ஏராளமாகத் திரண்டிருந்து, 'சித்தூர் தமிழகத்திற்கே' என்று குரல்எழுப்பிச் சென்றனர்.

மாநாடு துவக்கம்

பச்சையப்பா நகரில் அமைக்கப்பட்டிருந்த அழகிய பந்தலில் பிற்பகல் 5 மணிக்கு மாநாடு துவக்கப்பட்டது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் மாநாட்டில் திரண்டிருந்தனர் மலையாள மக்களும் இம்மாநாட்டில் கலந்துகொண்டு, தங்களின் கடமையைச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

வரவேற்புத் தலைவர் சே. என். சண்முகம் அனைவரையும் வரவேற்று சொற்பொழிவாற்றினார்.

பின்னர் சோஷலிஸ்டு கட்சித் தலைவர் எம். சின்னசாமி அவர்கள் மாநாட்டைத் துவக்கிவைத்து, சித்தூர் தாலுகா தமிழகத்தில் சேர வேண்டிய அவசியத்தை விளக்கினார்.

அடுத்து மாநாட்டிற்குத் தலைமை வகித்த திரு ம பொ. சிவஞானம் அவர்கள், திரு - கொச்சியிலுள்ள தமிழ்ப் பகுதிகள் ஒன்பதும் (சித்தூர் உட்பட) தமிழகத்திற்கு உரிமையானது என்றும், அதைப் பெற இன்றுபோல எல்லாக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து போரிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

பின்னர், கோவை மாவட்ட ஆட்சிமன்ற உறுப்பினர் ராமராஜ் அவர்கள் பச்சையப்பா அவர்களின் படத்தைத் திறந்து வைத்தார்.

அடுத்து, தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், 'திராவிட நாட்டுப் பிரிவினையை எவ்வளவு வற்புறுத்தி வருகிறோமோ, அது போலவே—இன்னும் அதைவிட, திராவிடத்தின் எந்தப் பகுதியும் பிற மொழி மாநிலங்களின் உரிமையைப் பறிக்க தி. மு. கழகம் அனுமதிக்காது' என்பதை விளக்கியும், தமிழகத்திற்கு உரித்தான பகுதிகள், தமிழகத்தில் சேர வேண்டியதற்காக தி. மு. கழகம் ஆற்றிவரும் பணியையும் விரிவாக எடுத்துரைத்தார். (விவரம் நாளை வரும்)

துணைப் பொதுச்செயலாளருக்கு சித்தூர் கல்லூரி மாணவர் கழகம், சித்தூர் பகுத்தறிவு படிப்பகம், சித்தூர்—சென்னை இணைப்புக் கமிட்டியார், சித்தூர் தாலுகா தமிழ் மக்கள், கொழிஞ்சாம்பாறை பகுதி தொழிலாளர்கள், சித்தூர் தமிழர் சங்கம் ஆகிய நிறுவனங்கள் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

அடுத்து திரு. கோபால்சாமி அவர்கள் தீர்மானங்களை முன்மொழிந்தார். கோவை ரசிதாசலம் ஆதரித்துப் பேசினார்.

(3-ம் பக்கம் பார்க்க)

பர்மிய கம்யூனிஸ்டு தலைவர்

நாடு திரும்பினார் !

இரங்கூன், நவ. 11—

பொதுவாக மன்னிப்பு வழங்கப்படும் என்ற உத்தரவினைப் புதுப்பித்து ஒரு திங்களுக்கு முன் சர்க்கார் உத்தரவிட்டதையொட்டி, பிரபல பர்மிய கம்யூனிஸ்டு தலைவர் சுமார் 80 தொண்டர்களுடன் சரண் அடைந்ததாகத் தெரியவருகிறது.

பர்மாவை ஜப்பான் ஆக்கிரமித்திருந்த காலத்திலும், யுத்தத்திற்குப் பின்னும், சர்க்காருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஒரு கோஷ்டியின் தலைவராக அவர் விளங்கிவந்தாராம்.

அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன், நாட்டில் அமைதியைக் கொண்டுவந்துவிட வேண்டும் என்று முயற்சிக்கும் சர்க்கார், மன்னிப்பு வழங்கும் காலவரையறையை கடந்த திங்களில் நீடித்த பின், சரணடைந்தவர்களில் இப்போது சரணடைந்த கோஷ்டி தான் அதிக எண்ணிக்கை உடையது என்றும் கூறப்படுகிறது.

உணவு உற்பத்திக்கு லட்சிய எல்லை

இரண்டாம் திட்டத்தின் ஏற்பாடுகள் குறித்து விளக்கம்

புதுடில்லி, நவ. 11—

இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டு உணவுத் திட்டத்தின் நோக்கம், முதியோருக்கு நாளொன்றுக்கு 15½ அவுன்ஸ் தானியமும், 2½ அவுன்ஸ் பருப்பு வகைகளும் கிடைக்கச் செய்வதுதானும்.

அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அதிகப்படியாக 1 கோடி டன் உணவு உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது; இதில், 85 இலட்சம் டன்கள் தானியங்களென்றும், மற்றவை பருப்பு வகைகளென்றும் தெரிகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள இலட்சியத்தை அடைவதில், உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமன்றி, சாகுபடி நிலப் பரப்பளவையும், மகசூலையும் அதிகரிப்பது நோக்கமாகும்.

அடிப்படை ஆண்டில் (1949—50) 460 இலட்சம் டன் தானியங்களும், 80 இலட்சம் டன் பருப்பு வகைகளும் உற்பத்தியாகியுள்ளதாம்.

முதல் ஐந்தாண்டுத் திட்ட இலட்சியம் 525 இலட்சம் டன் தானியமும், 91 இலட்சம் டன் பருப்பு வகைகளும் உற்பத்தி செய்வதாகும். குறித்த காலத்திற்கு மிகவும் முன்கூட்டியே இந்த இலட்சியம் நிறைவேறிவிட்டதாம்; நடப்பு ஆண்டில் தானிய உற்பத்தி சுமார் 554 இலட்சம் டன்கள்; பருப்பு வகைகள் உற்பத்தி 105 இலட்சம் டன்களாம்.

நடைமுறை ஆண்டில், புஞ்சை தானியங்கள் உற்பத்தி 226 இலட்சம் டன்களாகும்; இலட்சிய அளவைவிட 56 இலட்சம் டன் அதிகமென்று கூறப்படுகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இலட்சிய அளவுகளை நிர்ணயிப்பதில், மக்கள் தொகை அதிகரிப்பும் கணக்கிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது

அடுத்த ஐந்தாண்டுகளில் எதிர்பார்க்கப்படும் ஒரு கோடி டன் அதிக உணவு உற்பத்தியில், பெரிய—சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் காரணமாக 50 இலட்சம் டன்னும், உரங்கள் உபயோகத்தால் 25 இலட்சம் டன்னும், நில மீட்சி, பொறுக்கு விதைகள் உபயோகத்தால் 25 இலட்சம் டன்னும் உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களினால், அடுத்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நீர்ப்பாசனம் பெறக்கூடிய நிலப் பரப்பு சுமார் 80 இலட்சம் ஏக்கராகும்.

அடுத்த திட்டத்தில் புதிதாக மேற்கொள்ளப்படும் பெரிய திட்டங்களால், மேலும் 70 இலட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெறும்.

மொத்தமாகப் பாசனம் பெறும் நிலப்பரப்பு 1½ கோடி ஏக்கர்; சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களால் ஏறக்குறைய 1 கோடி ஏக்கர் நிலம் பாசனம் பெறும்.

இந்தியாவின் உணவில் தற்போது சத்து இல்லாததால், பால், இறைச்சி, பழம், மீன் போன்ற துணை உணவுப் பொருட்களை அதிக அளவில் விநியோகம் செய்வதற்கு சர்க்கார் முயற்சிக்குமாம்.

நகரங்களில் பால் விநியோகத்தை அதிகப்படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கவும் முயற்சிக்கப்படுமாம்.

நாட்டில் பழங்கள், காய்கறிகள் உற்பத்தியை அதிகப்படுத்தவும் மத்திய ஆட்சியினர் உத்தேசித்துள்ளனரென்றும், இதற்காகத் தீவிரமான ஆராய்ச்சிகள் நடைபெறுமென்றும் கூறப்படுகிறது.

மீன் பண்ணைகள் அபிவிருத்திக்கும் விரிவான திட்டங்களை சர்க்கார் அமுல் செய்யக் கூடுமாம்.

124 மின்சார ரயில் பெட்டிகள்

பம்பாயில் இறக்குமதியாகும்

புதுடில்லி, நவ 10—

பம்பாய் சுற்றுப்புற இரயில்வேக்களுக்காக சுமார் 124 மின்சார இரயில் பெட்டிகள் அடுத்த ஆண்டு இறக்குமதியாகும் என்று தெரிய வருகிறது.

1956 ஆகஸ்டு திங்கள் முதல் 1957 ஏப்ரல் திங்கள் வரை ஒவ்வொரு வாரமும் இத்தாலியிலிருந்தோ, ஜப்பானிலிருந்தோ பம்பாய்க்கு அந்த இரயில் பெட்டிகள் வந்தவண்ணமிருக்கும் என்றும், ஜப்பான் 74 பெட்டிகளும், இத்தாலி 50 பெட்டிகளும் ஏற்றுமதி செய்யும் என்றும் தெரிய வருகிறது.

இந்தப் பெட்டிகளின் மொத்த மதிப்பீடு சுமார் ரூ. 3 கோடி என்று தெரியவருகிறது.

புதிய பெட்டிகளில் சுமார் 100 வரை மத்திய இரயில்வேக்கும், எஞ்சியவை மேற்கு இரயில்வேக்கும் ஒதுக்கப்படும் என்றும், இவற்றில் சில பழுதாகிவிட்ட பெட்டிகளுக்குப் பதிலாகவும், இதரவை, அதிகரித்து வரும் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் உபயோகிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

விதர்ப்பம் தனியாகவே இயங்க வேண்டுமாம்

பிகார் முன்னாள் கவர்னர் கூற்று

பூனா, நவ. 11—

'சம்யுக்த மராட்டியத்தில் சேருமாறு விதர்ப்ப மக்கள் நிர்ப்பந்திக்கப்படக்கூடாது,"

என்று, பீகாரின் முன்னாள் கவர்னரான எம். எஸ். ஆனே, பிரதமர், குடியரசுத் தலைவர், உள்நாட்டு மந்திரி, காங்கிரஸ் தலைவர் ஆகியோருக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

'இதர பகுதிகளுடன் ஒரு பகுதி மக்களை இணைப்பது என்றால், அந்தப் பகுதி மக்களின் சம்மதம் பெற வேண்டுமென்பது அவசியமான ஒன்றாகும்' என்றும் அவர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'விதர்ப்பம் அமைவதை மாராட்டியத்தவர் எதிர்ப்பது வெறும் உணர்ச்சிவயப்பட்ட செயலாகும்' என்றும், விதர்ப்பம், நாகபுரி ஆகிய பகுதி மக்கள் தங்கள் எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளும் சுதந்திரமுடையவர்கள் என்று ஜே. வி. பி. அறிக்கை தெளிவாகக் கூறியிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

'ஒரே மொழி பேசுகிற மக்கள் இரு மாநிலங்களில் அடுத்தடுத்து வாழ்வது—விதர்ப்பம் தனித்திருப்பது இரு மாநிலங்களிடையேயும் நல்லெண்ணத்தையும், கூட்டுறவையும் வளர்க்கும்; ஆனால், நிர்ப்பந்தமாக இரு பகுதியினரையும் இணைப்பது, நெருக்கடியையும், கசப்பையும் வளர்க்கும்,' என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

சென்னை மாநிலத்தில் குற்றங்கள்

குறைந்திருப்பதாக போலீஸ் அறிக்கை

சென்னை, நவ. 10—

"1954-ம் ஆண்டில், சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பாதுகாக்க 10 சந்தர்ப்பங்களில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியிருந்தது; 1953-ல் 13 சந்தர்ப்பங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது; 1954-ல், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை,"

என்று, 1954-ம் ஆண்டிற்கான போலீஸ் நிர்வாக அறிக்கை குறிப்பிடுகிறது.

சென்னை மாநிலத்தில், குற்றங்களின் எண்ணிக்கையை 1953-ம் வருடத்துடன் ஒப்பிடுகையில், 1954-ம் ஆண்டில் கணிசமான அளவுக்குக் குறைந்திருப்பதாகக் கூறும் அந்த அறிக்கையில் சில புள்ளி விவரங்களும் தரப்பட்டுள்ளது:—

"1953ல், போலீசாரால் கைக்கொள்ளப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 72,830; 1954-ல், அக்குற்றங்களின் எண்ணிக்கை 54,233 தானும்!

1953-ல், மோசமான குற்றங்களின் எண்ணிக்கை 55,225; 1954-ல், 37,754 ஆகுமாம்.

கொலைக் குற்றங்களின் எண்ணிக்கை 971-லிருந்து 864-க்குக் குறைந்திருக்கிறதாம்.

கொள்ளை, வழிப்பறி, பூட்டை உடைத்து வீட்டிற்குள் பிரவேசித்துத் திருடுதல், கால்நடைக் களவுகள், சாதாரணத் திருட்டுகள் ஆகியவற்றிலும் எண்ணிக்கை குறைந்துள்ளதாம்.

குற்றங்களின் குறைவுக்குக் காரணம், சரியான காலத்தில் மழை பெய்தது; பொருளாதார நிலை பொதுவாக உயர்ந்திருப்பது ஆகியவற்றின் பிரதிபலிப்பாக இருக்கலாம் என்று மாநில சர்க்கார் கருதுகிறதாம்.

பல்வேறு தொழில் தகராறுகள், 'சமூக விரோத சக்தி'கள் நடவடிக்கைகள் இருந்தபோதிலும், சட்டமும், ஒழுங்கும் பாதுகாக்கப்பட்டதற்கு, சர்க்கார், பாராட்டுதல் தெரிவிக்கின்றனராம்.

கலகம், சட்டவிரோதமாகக் கூடுதல் ஆகியவை சம்பந்தமான வழக்குகள் 1953-ல், 1,354-ஆக இருந்தது—1954-ல், 1,569-ஆக அதிகரித்து விட்டதாம்

சென்னை நகர் சம்பந்தப்பட்ட மட்டிலும்தான் போக்குவரத்து விபத்துக்களின் எண்ணிக்கை தரப்பட்டிருக்கிறது.

1953-ல், விபத்துக்களின் எண்ணிக்கை 2,511; ஆனால், 1954-ல், 2,690-ஆக உயர்ந்துள்ளது.

1953-ல், போக்குவரத்து விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 62; 1954-ல், 54 ஆகும்.

திரு-கொச்சி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்துடன் தலைவர் முடிவுரை கூற வரவேற்புச் செயலாளர் நன்றி நவில மாநாடு இனிது முடிவுற்றது. பின்னர் கல்லூரி மாணவர், சுப்புராஜ் "சித்தூரி" என்னும் ஓரங்க நாடகத்தை நடத்தினர்.

இம்மாநாட்டுக்கு சித்தூர் பகுதியிலுள்ள எல்லாக் கட்சி முக்கியஸ்தர்களும் வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மாநாடு வெற்றிகரமாக நடந்தேறியது.

(ந-நி)

சென்னை எம். ஐ. டி. தொழிலாளர் சங்கம்

8—11—55 மாலை 5½ மணிக்கு மேற்படி தொழிற்சங்கப் பொதுக் கூட்டம் சென்னை—குரோம் பேட்டை காந்தி நகர் மைதானத்தில் தோழர் ஜி எம். மதுரையார் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில், மேற்படி சங்கத்தவரின் கோரிக்கைகளுக்கு இதுவரையிலும் எவ்விதப் பதிலும் எம். ஐ டி. நிர்வாகிகள் தராது இருப்பதால், இனிமேலும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் எதுவும் நடத்தாமல் நேரடி நடவடிக்கையில் இறங்குவதெனவும், இதற்காக மேற்படி நிர்வாகத்தினருக்கு 14 நாட்கள் தவணை கொடுப்பதெனவும், அந்தத் தவணைக்குள் பலன் கிடைக்காவிடில் சங்கத்தவர்குறைகள் தீரும்வரையில் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்வதெனவும், ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விபசார ஒழிப்புச் சட்டத்தால் குற்றம் புரிவோரைத் தடுக்க இயலவில்லை

ஆய்வுக் குழு தந்துள்ள கருத்துக்களும், சிபாரிசுகளும்

புதுடில்லி, நவ. 10—

"நாடு முழுமையிலும் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ விபசாரப் பழக்கம் இருந்துதான் வருகிறது; விபசாரத் தடை சட்ட அமுல் அவ்வளவு கண்டிப்பாக இல்லை. இக்கொடிய பழக்கத்தில் ஈடுபடுகிற பெண்கள் சாதாரணமாக சட்டத் தண்டனைக்குத் தப்பிவிடுகிறார்கள். விபசாரத்துக்கு அழைப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறவர்கள், குற்றத்தை ஒப்புக்கொண்டு, சொற்ப அபராதம் விதிக்கப்பட்டு, அதைக் கொடுத்துவிட்டபின் மீண்டும் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுவிடுகிறார்கள்,"

—என்று. மத்திய சமூக க்ஷேமநல போர்டு நியமித்திருந்த சமூக—ஒழுக்க ஆலோசனைக் குழு, தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"இந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். 'சார்வாலி', 'நாயக்', 'மாமா'க்கள் முதலிய பலதரப்பட்டவரின் பாதுகாப்பில்தான் அவர்கள் வாழ்கிறார்கள் இந்த ஏற்பாட்டை முறியடிப்பதற்குத் திட்ட ரீதியாக, கட்டுப்பாடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்று குழு, அதன் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

விபசாரப் பழக்கம் நகரங்களின் சாபக்கேடாக இருந்தபோதிலும் விபசாரத்துக்கு ஈடுபடுத்தப்படுகிற பெண்களில் 66 சதவிகிதம் பேர் கிராமாந்திரங்களிலிருந்துதான் வருகிறார்கள். 10 வயது முதல் 29 வயது வரையில் உள்ள பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

காரணம் என்ன?

நடத்தை தவறி பெண்கள் விபசாரத்தில் ஈடுபடுவதின் காரணம் குறித்து ஆராய்ந்ததில், 55·4 சதவிகிதம் பேர் பொருளாதாரக் காரணங்களாலும், 27·7 சதவிகிதம் பேர் குடும்பப் பிணக்குகள், ஆசை நிறைவேறாமை, கொடுமையாக நடத்தப்படுவது, குடும்பத்தவரால் கைவிடப்படுவதுபோன்றவற்றுடன் விதவைகளாகிவிடுவதுமே காரணம் என்றும், 16·9 சதவிகிதம் பேர், சில சமூகங்களில் கடைப்பிடிக்கப்படுகிற மத, சமூகப் பழக்க வழக்கங்கள் காரணமாய் விபசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றும், இவர்களைத் தவிர, ஏமாற்றிக் கடத்திக்கொண்டு போகப்படுகிறவர்களின் எண்ணிக்கை விவரம் கிடைக்கவில்லை என்றும், ஆனால், அவர்களும்கூட இந்தக் காரணங்களில் ஏதாவது ஒன்றினால்தான் விபசாரத்தில் ஈடுபடுகிறார்கள் என்றும் குழு கூறியிருக்கிறது.

'சூழ்நிலை' எங்கே?

விபசாரத் தடை வேலைகள் குறித்துக் குழு மேலும் தெரிவித்திருப்பதாவது:—

"கண்காணிப்பு, மீட்சி வேலைகளில், சென்னை, பம்பாய் ஆகிய மாநிலங்களைத் தவிர இதர மாநிலங்களில் செம்மையான நடவடிக்கை இல்லை; சுயேச்சை நிறுவனங்களின் மீட்சி வேலையும் திருப்திகரமாக இல்லை. போதிய பயிற்சியோ, இதில் நாட்டமோ இல்லாதவர்கள்தான் அவ்வேலைகளைச் செய்கிறார்கள் மீட்கப்பட்ட பெண்களுக்குத் தொழிற் பயிற்சி அளிப்பதற்கோ, அவர்களின் சுகாதார - ஒழுக்க மேற்பார்வைக்கோ ஏற்பாடு செய்யப்படவில்லை. ஏனெனில் அதற்கேற்ற சூழ்நிலையும் இல்லை.

சிபாரிசுகள்

"தண்டனை நடவடிக்கைகளை விட தடைநடவடிக்கைகளே முக்கியம்; அவற்றில்தான் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். கண்காணிப்புக் குழுவினரில் பாதிப் பேர் போலீசாராகவும், பாதிப் பேர் அந்தந்த இடத்தைச் சேர்ந்த குடிமக்களாகவும் இருக்க வேண்டும். அவர்களுக்கு இந்த வேலைக்கான பயிற்சி அளிக்கப்பட வேண்டும். அத்துடன் மாவட்ட வாரியாகப் பராமரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தி அனாதைப் பெண்கள் அங்கே அனுப்பி வைக்கப்பட வேண்டும்," என்று குழு சிபாரிசு செய்திருக்கிறது.

மத்திய சமூக நல போர்டு இலட்சிய விடுதிகளை நடத்தவேண்டும் என்பதும் குழுவின் சிபாரிசுகளில் ஒன்று. 400 பேருக்கு இடமுள்ள நான்கு பிராந்திய இலட்சிய விடுதிகளை ஏற்படுத்துவது அவசியம் என்று கூறப்பட்டிருக்கிறது. அங்கே அளிக்கப்படுகிற பயிற்சி வசதிகளையும், கல்வி வசதிகளையும் பயன்படுத்த விரும்புகிற மாநிலங்கள் அனுப்பி வைக்கிற பெண்கள் அங்கே பராமரிக்கப்பட வேண்டும் என்றும், அந்த நிலையங்களிலிருந்து வெளிவந்தபின் அப்பெண்களுக்கு வேண்டிய வசதிகளை அளித்துப் பராமரிக்கும் பொறுப்பு மாநில சர்க்கார்களுடையதாக இருக்க வேண்டும் என்றும் குழு, மேலும் சிபாரிசு செய்திருக்கிறது. அப்பெண்களுக்கு வேலையளிப்பதற்காகப் பல சிறிய தொழில்களும், குடிசைத் தொழில்களும் ஏற்படுத்தப்பட்டு, அவர்கள் தங்குவதற்காக விடுதிகளும் அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது.

விபசாரத் தடை, பெண்கள் மீட்சி முதலிய காரியங்களை ஆரம்பித்து நடத்துவது, மேற்பார்வை செய்வது, வேலைகளின் பலன்களை மதிப்பீடு செய்வது, புள்ளிவிவரங்களைத் தயாரிப்பது போன்ற வேலைகளுக்காக 'மத்திய டைரக்டரேட்' ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும், மத்திய க்ஷேம நலக் குழுவின் பொதுவான மேற்பார்வையில் இந்த மத்திய போர்டு இப்பிரச்சினை சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் ஒருமுகப்படுத்தும் என்றும் குழு மற்றொரு சிபாரிசு செய்துள்ளது.

இது தவிர, இளம்பருவத்தினருக்கு ஆண், பெண் உறவு சம்பந்தமான கல்வி போதனை, சமூகக் கல்வி போதனை, பிள்ளை வளர்ப்பு ஆலோசனை நிலையங்கள், திருமண ஏற்பாட்டுக் காரியாலயங்கள் முதலியவைகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று குழு சில நீண்டகாலத் திட்டங்களையும் சிபாரிசு செய்திருக்கிறது.

திருமதி தன்வந்தி ராமாராவ் தலைமையில் நியமிக்கப்பட்ட இக்குழு, தனது விசாரணை வேலைகளுக்காக 118 நிறுவனங்களைச் சென்று பார்வையிட்டதாம். அவற்றுள் பல நிறுவனங்கள் திருப்தியான முறையில் வேலை செய்துவந்துள்ளன என்றாலும் மற்றும் பல நிறுவனங்கள் படுமோசமாய் நடந்து வருவதுடன் திருட்டுத்தனமான விபசாரத்துக்குத் துணைகோலுவனவாக இருக்கின்றன என்று அக்குழு கருத்தறிவிக்கிறது.

"மாநில சர்க்கார்கள் இது சம்பந்தமாய்த் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; இதுவரை நடந்துவருகிற ஏற்பாடுகளையும், வேலை முறைகளையும் முற்றிலும் மாற்றியமைக்க வேண்டும்; நிர்வாக ரீதியிலும், பராமரிப்புப் பிரச்சினையிலும், வாழ்க்கைக்கு வழி ஏற்படுத்துவதிலும் புதிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்," என்றும் குழுவினர் கூறியுள்ளனர்,

சமூக விஞ்ஞான ஆராய்ச்சிக்கு ரூ. 2,60,000 நன்கொடை

சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு போர்டு நிறுவனம் மானியம் தரும்

சென்னை, நவ. 11—

சென்னை பல்கலைக் கழகப் பொருளாதாரப் பிரிவின் கீழ், சமூகவிஞ்ஞான ஆராய்ச்சி சம்பந்தமான ஒரு விசேடப் பயிற்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு அமெரிக்க போர்டு நிறுவனம் 52,300 டாலர் (சுமார் ரூ. 2,60,000) மானியமாக அளித்துள்ளதாகத் தெரிகிறது.

பல்கலைக் கழகங்களில், பொருளாதாரம், சமூக விஞ்ஞானம் ஆகியவற்றில் பயிற்சி தருவதற்கு, இப்பிரிவுகளின் படிப்புகளை பலப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளைப் பற்றி, திட்டக் குழு யோசனை செய்துவந்தது. அவ்விதப் பயிற்சிக்கான செலவுகளை நான்கு ஆண்டுகளுக்கு ஏற்றுக் கொள்வதற்கு போர்டு நிறுவனம்' முன்வந்துள்ளதால், திட்டக் குழுவின் திட்டத்தை அமுல் செய்வது சாத்தியமாகியுள்ளதாம்.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, நாடு முழுமையிலுமாக— சென்னை, டில்லி, பம்பாய், புனா, உத்கல், பஞ்சாப் ஆகிய 6 பல்கலைக் கழகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முதல் இரண்டாண்டு காலத்திற்கு வெளிநாட்டுப் பேராசிரியர் ஒருவரின் சேவை கிடைக்கக்கூடுமாம்.

சென்னை பல்கலைக் கழகத்திற்கு 4 ஆண்டுகளுக்கு 52,300 டாலர் கிடைக்கும்.

இந்தத் திட்டத்தின் கீழ், ஆராய்ச்சி மாணவர்களாக நியமனம் பெறுவதற்கு பல்கலைக் கழகம் ஏற்கனவே மனுக்கள் கோரியிருக்கிறது. பி.எச்.டி. பட்டதாரிகளுக்கு மாதம் ரூ 250 உபகாரச் சம்பளமும் எம். ஏ. லிட். ஆனர்ஸ் அல்லது எம். ஏ. பட்டதாரிகளுக்கு முறையே ரூ 200; ரூ. 150 வீதம் உபகாரச் சம்பளமும் கிடைக்கும் அடுத்த ஜனவரி முதல் பயிற்சி ஆரம்பமாகக்கூடும்.

18,800 தொழிலாளர்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்றும் தெரியவருகிறது.

இந்தத் தொழிலாளர்கள் எல்லாம் சோஷலிஸ்டுகளின் ஆதிக்கத்திற்குட்பட்ட தொழிற் சங்கத்தில் அடங்கியவர்களாம்.

★

800 பாங்கி ஊழியர் வேலை நிறுத்தம்

கான்பூர், நவ. 10—

பாங்கித் தொழிலில், கான்பூரை 'ஏ' பிரிவு இடமாகக் கருத வேண்டும் என்று தாங்கள் கோரியிருந்ததை ஏற்க இந்திய சர்க்கார் மறுத்துவிட்டதை எதிர்த்து, இங்குள்ள சுமார் 800 பாங்கி ஊழியர்கள் இரண்டு மணி நேரம் பாங்கிகளுக்குள்ளாகவே தங்கள் தங்கள் இடத்தில் அமர்ந்துகொண்டு—ஆனால் பேனாவைத் தொடாமல், வேலை நிறுத்தம் செய்தார்கள் என்று தெரியவருகிறது.

★

விமானக்கூடத் தொழிலாளர் வேலை நிறுத்தம்!

பாரிஸ், நவ. 10—

மாதந்தோறும் தங்களுக்கு 10 000 பிராங்கு (சுமார் ரூ. 135) போனஸ் வேண்டுமெனக் கோரி, பாரிஸ் வட்டார விமானக்கூடத் தொழிலாளர்கள் இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் என்றும், இதனால் விமானப் போக்கு-வரத்து பாதிக்கப்பட்டதாயும் கூறப்படுகிறது. தங்கள் கோரிக்கை ஏற்கப்படும்வரை காலவரையறை ஏதுமின்றி தாங்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

உணவு உற்பத்தி அளவு

மந்திரி பக்தவத்சலம் விளக்கம்

சென்னை, நவ. 11—

"உணவு உற்பத்திக்கு இரண்டாம் திட்டத்தின்கீழ் இலட்சிய எல்லையாக 6 இலட்சம் டன் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; புதிய வகை நெல் விளைவிக்கும் பரப்பு 26 இலட்சம் ஏகரிலிருந்து 51 இலட்சம் ஏகராக அதிகரிக்கப்படும்," என்று சென்னை விவசாய மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

'கிராமப் புறங்களில் விவசாயத் தொழில் விரிவடைவது, வேலைப் பற்றாக்குறையை நீக்கி அதிகமான வேலையளிக்க வாய்ப்புத் தரும்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'ஆண்டுதோறும் கரும்பு உற்பத்தி 35,00,000 டன்னிலிருந்து 45,00,000 டன்ஆக உயர்ந்திருக்கிறது; சர்க்கரை உற்பத்தி 30,000 டன்னிலிருந்து 90,000 - டன்னாக உயர்ந்திருக்கிறது; பருத்தி 106 இலட்சம் பேல் உயர்ந்திருக்கிறது' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

திருச்சி நகரசபை தலைவர் தேர்தல்

டாக்டர் மதுரம் வெற்றி

திருச்சி, நவ. 11—

திருச்சி நகர சபைத் தலைவராக சுயேச்சையாளரான டாக்டர் ஈ. பி. மதுரம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் ஏ. எஸ். ஜி. லூர்துசாமி போட்டியிட்டு தோல்வியடைந்தார்.

டாக்டர் மதுரத்துக்கு 19 வாக்குகளும், லூர்துசாமிக்கு 15 வாக்குகளும் கிடைத்தன.

கூட்டத்திற்கு 36 உறுப்பினர்களும் வந்திருந்தனர். காங்கிரஸ் தரப்பில் 18 உறுப்பினர்களும், எதிர்தரப்பில் 18 உறுப்பினர்களும் உட்கார்ந்திருந்தனர்.

தோழர்கள் பலர், புதிய தலைவரைப் பாராட்டிப்பேசினர் பாராட்டுரைகளுக்கு டாக்டர் மதுரம் பதிலளிக்கையில், நகர அபிவிருத்திக்கான பணியில் எல்லோருடனும் ஒத்துழைப்பதாக உறுதி கூறினார்.

பல்கலைக் கழக மாணவர்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணிப் போரில் ஈடுபட்டிருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார். இவர் பட்டினிப் போரைத் துவங்கு முன்னர், பல்கலைக் கழக நிர்வாகி ஒருவர், லக்கன் சிங் பல்கலைக் கழக மாணவர் அல்லவென்றும், அவர் கழகக் கட்டிடத்துள் அத்துமீறி நுழைவதாயும், அவர் அங்கு இருப்பதால் கழகம் வேலைகளை அமைதியாகக் கவனிக்க இயலவில்லை என்றும், எனவே அவரை அங்கிருந்து வெளியேற்ற வேண்டிவரும் என்றும் அறிவித்திருக்கிறார்.

வெளியேற்றப்பட்ட மாணவர்கள் மேலும் நால்வர் மீதும் இம் மாதிரி 'நோட்டீசு'கள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

கடந்த செப்டம்பர் திங்களில், இந்த லக்கன் சிங் 12 நாள் உண்ணாவிரதமிருந்ததும், அதன் விளைவாக பல்கலைக் கழகம் ஒரு திங்களுக்கு மூடப்பட்டதும் நினைவிலிருக்கலாம்.

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

★

14—11—55 : சென்னிமலை

15—11—55 } (திருச்சி- மாநாடு
16—11—55 } சம்பந்தமாக)

17—11—55 : பவானி

சென்னை கல்விச் சங்கம்

13—11—55 மாலை 5 மணிக்கு சென்னைக் கல்விச் சங்கத்தின் ஆதரவில், சென்னை, சூளை பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில் 'இயல்புடைய மூவர் யார்?' என்னும் பொருள் பற்றி தோழர் அ. வீ. குருசாமி தலைமையில் தோழர் முருகதாசன் பேசுவார்.

குறள் வகுப்பு

13—11—55 காலை 10 மணிக்கு சென்னை, மண்ணடி திருவள்ளுவர் இளைஞர் கழகச் சார்பில் இராசமன்னார் பாடசாலையில் திரு. சி. முருகேசனார் அவர்கள் காமத்துப் பாலில் 'அவர் வயின் விதும்பல்' என்ற அதிகாரத்திற்கு விளக்கவுரையாற்றுவார்.

மீனவர் கல்வி உதவி நிதி துவக்க விழா

13—11—55 காலை 9 மணிக்கு இராயபுரம் மீனவர் இளைஞர் முன்னணியினரால் மேற்படி நிதி உதவி துவக்க விழா தோழர் டி. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் தோழர் சி. சாமி துவக்கிவைப்பார்.

நினைவுக் கூட்டம்

13—11—55 காலை 9 மணிக்கு சென்னை திருவள்ளுவர் முத்தமிழ் கழகப் பணிமனையில (எண். 10, லாயர் சின்னதம்பி முதலி தெரு 8-வது வட்டம்) தோழர் சி. சோ. சுந்தரம் தலைமையில் திரு வேலாயுதம் நினைவு நாள் விழா கொண்டாடப்படும். தோழர்கள் பலர் பேசுவர்.

மதுரை நகர் ஓட்டல் தொழிலாளர் கழக அலுவலகத் திறப்பு விழா

15—11—55 மாலை 7 மணிக்கு: மதுரை பாண்டிய வேளாளர் தெருவில், டாக்டர் அருணாசலம் தலைமையில் கழகப் புதிய அலுவலகத் திறப்பு விழா நடைபெறும் தோழர் சி. பி. சிற்றரசு பேசுவார். அதுபோது, நகர் மன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாப் எம். ஹீரா, எஸ். முத்து வி. கே. தாஸ், இ. ரெங்கசாமி ஆகியோருக்குக் கழகச் சார்பில் பாராட்டு வழங்கப்பெறும்.

மாலுமிகளுடன் மாலத் தீவு கப்பல் மூழ்கியது?

கல்கத்தா, நவ. 11—

சென்ற ஞாயிறன்று வங்கக் கடலில் ஏற்பட்ட புயலினால், 25 மாலுமிகளுடன் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட மாலத் தீவுக்குச் சொந்தமான 'பத்துல் பாரி' என்ற கப்பல், 'ஓட்டை' ஒன்று ஏற்பட்டதால், எல்லா மாலுமிகளுடன் மூழ்கிவிட்டதாக நம்பப்படுகிறதாம்.

9 இந்திய வேவு விமானங்களும், 5 கப்பல்களும் அதைத் தேடிவருவதாகச் செய்திகள் கூறின.

ரஷ்யா நடத்தும்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சோதனையில் ஈடுபடும் என்று தெரிவதாகவும் அமெரிக்க அணு சக்திக் குழு தெரிவித்திருக்கிறது

மீண்டும் செப்டம்பர் திங்களில் ரஷ்யா ஒரு அணுகுண்டு சோதனை நடத்தியதாக அமெரிக்க அணு சக்திக் குழு தெரிவித்தது.

நிச்சயமாகத் தொடர்ந்து அணுகுண்டு சோதனை நடத்துவதில் ரஷ்யா ஈடுபட்டிருப்பது வெளிப்படை என்று அந்த அமெரிக்கக் குழு திட்டமாகத் தெரிவித்ததாம்.

பாதுகாப்பு அமைச்சர் ஆட்சியைக் கைப்பற்றினார்

பிரேசில் நாட்டில் இராணுவப் புரட்சி

கடற்படை — இராணுவத்திற்கிடையே கடும் போர்

ரியோ டி ஜினீரோ, நவ. 11—

தென் அமெரிக்கக் குடியரசு நாடான பிரேஜிலில், பாதுகாப்பு (யுத்த) இலாகா அமைச்சர் ஜெனரல் டிக்சீராலாட் என்பார் திடீரென இராணுவப் புரட்சி செய்து, நாட்டின் அதிகாரத்தை இன்று கைப்பற்றினார். இதன் விளைவாக இராணுவத்திற்கும் —கடற்படைக்கும் இடையே போர் மூண்டுவிட்டதாம்.

ஜெனரல் வாட்டின் 'அரசியல் எதிரி'யான கார்லஸ் லஸ், தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாதுகாப்பு இலாகா அமைச்சர் பதவியை அவர் இராஜினாமா செய்துவிட்டாராம்.

நவ. 3-ந் தேதியன்று உடல் நலம் பாதிக்கப்பட்டதையொட்டி, பாதுகாப்பு மந்திரியாக இருந்த ஜோ கேப் பில்ஹோ என்பவர் விலகியதைத் தொடர்ந்து, ஜெனரல் லஸ் பாதுகாப்பு மந்திரியானார்.

பல வாரங்களாகவே, திடீரென இராணுவப் புரட்சி ஏற்படுமென்ற பயமுறுத்தல் இருந்து வந்ததாம்; ஆனால், புரட்சித் திட்டம் நிறைவேறுமலிருக்க இராணுவத்தினரை ஜெனரல் வாட் தடுத்து வந்தாராம்.

ஆனால், இன்று காலை, நாட்டின் அரசியல் நெருக்கடி, இராணுவத்திற்கும் —கடற்படைக்குமிடையே பெரும் போராக மாறிவிட்டதாம்.

அதிகாரத்தைக் கைப்பற்றிய ஜெனரல் வாடடின் செய்கை 'நாசகரமானது' என்று, கடற்படையும், விமானப் படையும் ஒரு அறிக்கையில் கூறுகிறதாம்.

தற்காலிகத் தலைவர் கார்லஸ், யுத்தக் கப்பல் ஒன்றில் இருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இந்தப் 'புரட்சி'யில், நாட்டின் பல பகுதிகளிலுள்ள ஜெனரல்கள், தளபதிகள் கலந்துகொள்ளவில்லையாம்.

நிர்ணயிக்கப்பட முடியாத செய்தி ஒன்று, கடற்படை இலாகா மந்திரி கைது செய்யப்பட்டாரெனக் கூறுகிறதாம்.

சிங்கள மொழி முன்னணி

அரசாங்க மொழிப் பிரச்சினை மீது தேர்தலில் போட்டியிடுமாம்

கொழும்பு, நவ 11—

புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'சிங்கள மொழி முன்னணி'யினர், 'சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்க வேண்டும்' என்ற கோரிக்கை மீது, அடுத்த இலங்கைப் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முடிவு செய்திருக்கின்றனராம்.

இலங்கைப் பிரதிநிதி சபையில் மொத்தமுள்ள 101 இடங்களில், 80 இடங்களுக்கு இம்முன்னணியினர் போட்டியிடுவரென்று செய்தி ஒன்று கூறுகிறது.

மொழிப் பிரச்சினையே தேர்தலில் முதன்மையான இடம்பெறும் என்று 'பார்வையாளர்'கள் கருதுகின்றனர்.

டிசம்பரில் நடைபெறப் போகும் மாநாட்டில், ஆளும் கட்சியினர் (யு. என். பி) தங்கள் மொழிக் கொள்கையைத் தெளிவுபடுத்திய பின்பு, எந்தெந்த கட்சிகள் எந்தெந்தக் கொள்கைகள் மீது போட்டியிடும் என்பது தெளிவாகிவிடும் என்று கூறப்படுகிறது.

'ஐ. நா. மீது எகிப்துக்கு நம்பிக்கை இல்லை'

கெய்ரோ வானொலி குற்றச்சாட்டு

"ஐ. நா. சபையினுடைய முடிவுகளிலும், வேண்டுகோள்களிலும், எகிப்து இனியும் நம்பிக்கை வைப்பதற்கு இல்லை. பாதுகாப்பிற்கு இனி, தன் நாட்டு இராணுவ வீரர்களின் ஆற்றலையும், வீரத்தையும் நம்பிக் கொள்ளும்,"

என்று, சர்க்கார் வசமுள்ள கெய்ரோ வானொலி குறிப்பிட்டிருக்கிறது.

இஸ்ரேல்—எகிப்து எல்லையில் நெருக்கடியைத் தவிர்ப்பதற்கென ஐ. நா. போர் நிறுத்த ஒப்பந்த பிரதான மேற்பார்வையாளரான ஜெனரல் பர்ன்ஸ் தெரிவித்திருந்த யோசனைகளைக் குறித்து விமர்சிக்கும்போதுதான், அந்த வானொலி மேற்கண்டவாறு தெரிவித்தது.

எகிப்து வானொலியின் கருத்தே தவிர, அது எந்த ஒரு விமர்சகரின் கருத்துமல்ல என்றும் அந்த வானொலி அறிவிப்பு கூறியது

"எகிப்து, மற்றும் அரபு நாடுகளைப் பலியிட்டு இஸ்ரேலுக்குப் பாதுகாப்பளிப்பதே ஐ. நா.-வின் யோசனைகளாயிருக்கின்றன. இந்த சதி நோக்கு, பிரிட்டன், அமெரிக்க நாடுகளின் கொள்கையிலும் ஊடுருவி நிற்கிறது," என்றும் அந்த வானொலி குற்றம் சாட்டியதாகத் தெரிகிறது.

"கடந்த ஏழாண்டு காலமாக எகிப்து, ஐ. நா.-வின் வேண்டுகோள்களை மதித்து நடந்து வந்திருக்கிறது; ஆனால், அந்தக் காலம் முழுவதிலும் எகிப்தை இஸ்ரேல் அவமதித்தே வந்திருக்கிறது" என்றும் அந்த வானொலி அறிக்கை கூறிற்றும்.

பொன்மலை திருக்குறள் கழகம்

6—11—55 காலை 10 மணிக்கு, மேற்படி கழகச் சிறப்புக் கூட்டம் எண். ஜி 7 இல்லத்தில் நடைபெற்றது. பெங்களூர் மகாராணி கல்லூரி தமிழ்ப் பேராசிரியை திருமதி தி. இ. நாகாம்பாள் 'திருக்குறள் சிந்தனை' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

பம்பாய் குறித்த காங்கிரஸ் முடிவு

இறுதியானதாம்—உறுதியானதாம்!

எஸ். கே. பட்டீல் கூற்று

பம்பாய், நவ. 11—

"பம்பாய் நகரம், சம்யுக்த மராட்டியம். குஜராத் என்று மூன்று மாநிலங்கள் அமையவேண்டும்—என்று காங்கிரஸ் செயற்குழு செய்துள்ள முடிவு இறுதியானது; உறுதியானது," என்று பம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவர் எஸ். கே பட்டீல் தெரிவித்திருக்கிறார்.

இந்த முடிவெடுப்பதற்கு மராட்டிய பிரதேசப் பிரதிநிதியான டி. ஆர். தியோகிர்காரும் உடந்தையாயிருந்ததாயும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"மாநிலக் குழுவின் அறிக்கையின் எதிரொலியை உலகமே கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறது; எனவே, ஜனநாயகம் மக்களுக்கு உதவும் ஒரு நல்லாட்சியாக விளங்கச் செய்ய இந்தியாவினால் முடியும் என்பதை நாம் காட்ட வேண்டும்," என்றும் அந்த காங்கிரஸ் தலைவர் பட்டீல் குறிப்பிட்டிருக்கிறாராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. அவர்களால அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.